[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2014 டிசம்பர் 4

கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு)

3. அலுவல் ஆய்வுக் குழு முடிவு குறித்து அவையில் எழுப்புதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்துகொண்டீர்கள். அக்குழுக் கூட்டத்தில் உங்கள் கருத்தினைத் தெரிவித்து, குழு எடுத்த முடிவினை நீங்கள் ஏற்றுக்கொண்டு சென்றீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், இதுகுறித்து உங்களுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், நேற்று அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவினை ஏற்றுக்கொண்டார். (குறுக்கீடு) இல்லை, அவர் நேற்று குழு எடுத்த முடிவினை ஒத்துக்கொண்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள், குழுக் கூட்டத்தில், **குழுவின் முடிவினை ஒத்துக்கொண்டு சென்றார். (குறுக்கீடு) இப்படியெல்லாம் பேசக்கூடாது. திட்டமிட்டு வந்து, அவையை நடத்தவிடாமல் இவ்வாறு செய்வது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, நீங்கள் பேசுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை மாற்ற முடியாது. (குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவினை மாற்ற முடியாது. (குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே முடிவாகிவிட்டது. அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு குறித்து, அவையில் எழுப்பி, அதனைப் பிரச்சினையாக்கக்கூடாது. அதைப்பற்றி இங்கு விவாதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) அதைப்பற்றியெல்லாம் இங்கு விவாதிக்க முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

(இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஐந்து தென் மாவட்டங்களின் ஜீவாதார உரிமையை, இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் கை கழுவிவிட்ட நிலையில், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னந்தனியாக, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின் வாயிலாக போராடி, "முல்லை-பெரியாறு அணையின் நீர்த் தேக்கத்தினை 142 அடியாக உயர்த்திக்கொள்ளலாம்" என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினைப் பெற்றுத் தந்து, தமிழகத்திற்கு மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்ப்புக்கு பிறகு, நேற்று கேரள அரசு மறுசீராய்வு மனுவைப் போட்டது, அதனை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. அப்படிப்பட்ட தீர்ப்பினைப் பெற்றுத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த அவையில் நன்றி கூறவேண்டும். அதோடுமட்டுமல்லாமல், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த அனுமதிக்கவேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து (குறுக்கீடு) வெற்றி பெறுவதற்குரிய ஒரு தீர்மானத்தை இந்த அவையில் கொண்டுவர இருக்கிறார்கள். அவ்வளவு அதிமுக்கியம் வாய்ந்த தீர்மானம் வர இருக்கின்ற நேரத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு குறித்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) உயிர் நாடிப் பிரச்சினையான, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முன்வர வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110-ன்கீழான அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான முக்கியமான பொருள் குறித்து எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், உட்காருங்கள். இவ்வாறு நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடு) இதுபோன்று நடந்துகொள்வது முறையல்ல. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். இதுபோன்று*

நடந்துகொண்டால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு குறித்து இன்று அவையில் விவாதிக்கவேண்டும் என்று கேட்பது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) தற்போது, விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிவிப்புகளை நிறைவேற்றியது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடு) அதுகுறித்து எடுத்துக்கொள்ளப்போகிறேன், உட்காருங்கள்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிவிப்புகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.சி. சந்திரகுமார், ப. பார்த்தசாரதி, தி.மு.க. கட்சியைச் சேர்ந்த திரு. மு.க. ஸ்டாலின், புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். அறிவிப்புக் கொடுத்தவர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள். (குறுக்கீடு) திரு. ப. பார்த்தசாரதி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி சார்பாக பேசப் போகிறார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

[திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் (திருவாளர்கள் சி. மைக்கேல் ராயப்பன், செ. அருண் பாண்டியன், க. தமிழழகன், டி. சுரேஷ்குமார், க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]